# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

## OS. No.76/2022

சாட்சி - வா.சா.1

பெயர் - ஜேக்கப் பிரேமானந்த்

கணவர் பெயர் - ஜீவரத்தினம்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **02.07.2026.**

குறுக்கு விசாரணை-

வாதி வில்சன் எனக்கு துாரத்து உறவினர். நான் பி.ஏ படித்துள்ளேன். எனக்கு 65 வயதாகிறது. நான் மருத்துவ துறையில் தற்போது பணியாற்றி வருகிறேன். ஜீவரத்தினம் தாவா சொத்து மற்றும் இதர சொத்துகளின் முதல் உரிமையாளர். ஜீவரத்தினம் அவருடைய சுய சம்பாத்திய சொத்தில் 1958ல் தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களை அப்துல் சுக்குரிடமிருந்து வாங்கினார். 23.03.1989 ஜீவரத்தினம் காலமானார். ஜீவரத்தினத்தின் மனைவி பெயர் கனக சுந்தரி மற்றும் அவர் எனது தாயார். என் உடன் பிறந்தவர்கள் 1. சாமூவேல் பிரேம் ராஜ், 2.பிரேம் குமார், 3, பிரேமா வசந்தி, 4.ஜேக்கப் பிரேமானந்த் ஆகிய நான். மேற்படி நாங்கள் நான்கு பேரும் நல்ல நிலையில் ஆரோக்கியமாக உள்ளோம். எனது தகப்பனார் அவருடைய சுய சம்பாத்தியத்தில் சொத்துக்களை வாங்கினார்.

தாவா சொத்து மொத்த வீஸ்தரணம் 7 1/2 செண்ட் என்றால் சரிதான். 7 1/2 செண்டிற்காக இந்த இருவழக்குகள் என்றால் சரி. இந்த 7 1/2 செண்டிற்கு சாலைக்கு செல்லகூடிய வழி இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து 7 1/2 செண்டிற்கு நான்கு

புறமும், செல்வதற்கு வழி இல்லை என்றும், நான் வழக்கிற்காக தவறுதலாக தாவா சொத்திற்கு செல்ல வழி இருக்கிறது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கு கிழக்கு புறமாக உள்ள சொத்தை என் தகப்பனார் ஜீவரத்தினம் ஜீயோன் சர்ச்சிற்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண்.1777 ஆகும். அப்துல் சுக்குர் என்பவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை என் தந்தை 3ல் 2 பாகம் கிரையம் வாங்கியுள்ளார்.

<u>பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது</u>.

The Witness deposed on solemn affirmation and typed to my dictation in open court and read over the same to the witness and admitted by the witness to be correct, on this day the July 02nd, 2026.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.07.03 10:27:34 +0600

Additional District Judge(FTC),
Vellore.